## அமித்ஷா கட்டும் ஆகாயக் கோட்டை!




உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற மாஸ்டர்ஸ் கோப்பை - 2025

# செஸ் சாம்பியன் பட்டம் வென்ற பிரக்ஞானந்தாவிற்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன் 30 -

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற UzChess மாஸ்டர்ஸ் கோப்பை 2025இல் சாம்பியன் பட்டம் வென்ற செஸ் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு வாழ்த்து தெரிவித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-



**UzChess மாஸ்டர்ஸ் கோப்பை 2025இல் வென்றதற்கும், கிளாசிக்கல் வீரர் தரவரிசையில் இந்திய அளவில் முதலிடத்தைப் பிடித்ததற்கும், லைவ் ரேட்டிங் மதிப்பீட்டில் உலகின் நம்பர் 4 வீரராக உயர்ந்ததற்கும் பிரக்ஞானந்தாவுக்கு வாழ்த்துகள்.**

**வெற்றிப் பாதையில் தொடரும் வாகையரான அவரது கரங்களில் செக்மேட் செய்யமுடியாத எதிர்காலம் உள்ளது!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.அருண்ராஜ் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 02.07.2025 | சங்கராபுரம் பேரூர் | வள்ளலார் மடம் அருகில் | சிறுவானூர் பரசுராமன் கோட்டை யமுனா |
| 2 | | சங்கராபுரம் தெற்கு ஒன்றியம் | மேலப்பட்டு | சிறுவானூர் பரசுராமன் கோட்டை யமுனா |
| 3 | 03.07.2025 | திருநாவலூர் கிழக்கு ஒன்றியம் | கெடிலம் | தா.தமிழ்கொண்டான் க.இன்பத்தமிழன் |
| 4 | | திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றியம் | சித்தனங்கூர் | தா.தமிழ்கொண்டான் க.இன்பத்தமிழன் |
| 5 | 04.07.2025 | கள்ளக்குறிச்சி வடக்கு ஒன்றியம் | மாத்தூர் | திருப்பத்தூர் ரஜினி க.இன்பத்தமிழன் |
| 6 | | வடக்கனந்தல் பேரூர் | பழைய பேருந்து நிலையம் கச்சிராயபாளையம் | திருப்பத்தூர் ரஜினி க.இன்பத்தமிழன் |
| 7 | | உளுந்தூர்பேட்டை கிழக்கு ஒன்றியம் | ஆசனூர் | பசும்பொன் ரவிச்சந்திரன் ச.ஷாநவாஸ் |
| 8 | | உளுந்தூர்பேட்டை மேற்கு ஒன்றியம் | எலவனாசூர் கோட்டை | பசும்பொன் ரவிச்சந்திரன் ச.ஷாநவாஸ் |
| 9 | 07.07.2025 | கல்வராயன்மலை தெற்கு ஒன்றியம் | நொச்சிமேடு, குண்டியாநத்தம் ஊராட்சி. | சேலம் கோவிந்தன் இ.நேரு |
| 10 | | கல்வராயன்மலை வடக்கு ஒன்றியம் | இன்னாடு ஊராட்சி | சேலம் கோவிந்தன் இ.நேரு |
| 11 | 08.07.2025 | சின்னசேலம் வடக்கு ஒன்றியம் | எலியத்தூர் | கந்திலி கரிகாலன் தஞ்சை பூர்ணிமா |
| 12 | | சின்னசேலம் பேரூர் | காந்தி நகர் | கந்திலி கரிகாலன் தஞ்சை பூர்ணிமா |
| 13 | | உளுந்தூர்பேட்டை நகரம் | ஈஸ்வரன்கோவில், 4–வது வார்டு. | குடியாத்தம் புவியரசி மு.ரோஜா |
| 14 | | திருநாவலூர் மேற்கு ஒன்றியம் | அண்ணா திடல், களமருதூர். | குடியாத்தம் புவியரசி மு.ரோஜா |

கலைஞர் 100 1924 - 2023



**கள்ளக்குறிச்சி**

நாள் : 28.06.2025



கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி_ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க , விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, அரகண்டநல்லூர் பேரூராட்சியில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. தலைமை கழக பேச்சாளர் சேர்காடு கென்னடி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். உடன் மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், நகர செயலாளர் ஆர்.சுந்தரமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பேரூராட்சி தலைவர் ராயல் எஸ்.அன்பு, மாவட்ட சிறுபான்மையினர் அணி தலைவர் எம்.எஸ்.கே.அக்பர் , நகர இளைஞர் அணி அமைப்பாளர் தினகரன், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# காணொலிக் கூட்டத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...!

முதல் பக்கத் தொடர்ச்சி!

**மூன்று நாட்கள் நடைபெறுகிறது.**

ஜூலை 1 - சென்னையில் செய்தியாளர்கள் சந்திப்பில் முறைப்படி நான் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பை அறிவிப்பேன். அடுத்து 38 மாவட்டங்களிலும் பொறுப்பு அமைச்சர்கள்/ மாவட்டக் கழகச் செயலாளர்கள் செய்தியாளர் சந்திப்பை நடத்திட வேண்டும்.

**ஓரணியில் தமிழ்நாடு பொதுக்கூட்டங்கள்!**

ஜூலை 2 - 76 கழக மாவட்டங்களிலும் ஓரணியில் தமிழ்நாடு பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். இளைஞர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்வதை இளைஞரணி உறுதி செய்திட வேண்டும்.

ஜூலை 3 - தமிழ்நாடு முழுவதும் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வீடுவீடாகச் சென்று மக்களைச் சந்திக்க வேண்டும். அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், மூத்த நிர்வாகிகள் எல்லாரும் அவரவர் சொந்த வாக்குச்சாவடிகளில் உள்ள வீடுகளுக்கு நேரில் செல்ல வேண்டும். கழகச் செயல் வீரர்கள் ஒருவர் விடாமல் வீட்டுக்கு வீடு சென்று பரப்புரைச் செய்வதை உறுதிசெய்திட வேண்டும்.

**மூன்றாவது, வீட்டுக்கு வீடு பரப்புரை- ‘டோர் டூ டோர்’!**

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் வாக்குச்சாவடி முகவர், பூத் டிஜிட்டல் ஏஜெண்ட், ஒரு பெண், ஒரு இளைஞர், BLC உறுப்பினர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்! இது கட்டாயம். இதில் யாருக்கும் விதிவிலக்கு கிடையாது! இவர்களுடன் கழகத்தின் நிர்வாகிகளும் செயல்வீரர்களும் இணைந்து கொள்ள வேண்டும்.

**நான்கு படி நிலைகளில் நாடு முழுவதும் நிகழ்ச்சிகள்! நான்காவதாக, நிறைவு!**

ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதிக்கு பிறகு, தமிழ்நாடு முழுக்க ஓரணியில் தமிழ்நாடு நிறைவு விழாக்களை நடத்திட வேண்டும்.

மேற்சொன்ன நான்கு படிநிலைகளும் சரியாக நடைபெறுகிறதா என்பதை உறுதிசெய்ய வேண்டிய முழுப்பொறுப்பு மாவட்டச் செயலாளர்களுக்கும், மண்டலப் பொறுப்பாளர்களுக்கும், தொகுதி பார்வையாளர்களுக்கும் உரியது.

இப்பரப்புரையில் முக்கியமான அம்சங்கள்

**நம்பர் 1: தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இல்லங்களையும் 100% சந்தித்திருக்க வேண்டும். எதிர்கட்சியினர் இல்லங்களுக்கும் நேரில் சென்று பேசிட வேண்டும்.**

**நம்பர் 2: ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் திமுக உறுப்பினர் சேர்க்கைக்கான பரப்புரை மட்டும் இல்லை. இது தமிழ்நாட்டு மக்களை நம் மண், மொழி, மானம் காக்க ஒன்றிணைக்கும் ஒரு முன்னெடுப்பு.**

**நம்பர் 3: வாக்குச்சாவடி முகவர், பூத் டிஜிட்டல் ஏஜெண்ட், ஒரு பெண், ஒரு இளைஞர், BLC உறுப்பினர், கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள் கொண்ட குழுவாக சேர்ந்துதான் ஒவ்வொரு வீட்டுக்கும் செல்ல வேண்டும்.**

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## எழும்பூரில் குடும்ப அட்டை வழங்கிடும் சிறப்பு முகாம்!

*சென்னை, ஜூன் 30-*

*கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் சார்பில், எழும்பூர் தொகுதி மக்களின் தேவைகளைக் கண்டறியும் நோக்கில் “Connect With MLA” என்றொரு தனிச்சிறப்பான திட்டம் கடந்த பிப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையில் முன்னெடுக்கப்பட்டு, தொகுதியைச் சேர்ந்த 29,000 குடும்பங்களை நேரில் சந்தித்து, அவர்களின் கோரிக்கைகள் வகைப்படுத்தப்பட்டுப் பதிவு செய்யப்பட்டன.*

*இம்முன்னெப்பின் போது பொதுமக்கள் தமது பல்வேறு தேவைகள் குறித்துக் கூறியிருந்த நிலையில், 1,211 பேர் குடும்ப அட்டை தொடர்பான தேவைகளைக் கோரியிருந்தனர். இக்கோரிக்கையை நிறைவேற்றித் தரும் விதத்தில் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், வார்டு எண்.99, புரசைவாக்கம், ராஜா அண்ணாமலை சாலையில் உள்ள தர்மபிரகாஷ் திருமண மண்டபத்தில் எழும்பூர் தொகுதி மக்களுக்கான குடும்ப அட்டை சிறப்பு முகாம் நேற்று 28.06.2025 அன்று காலை 9.00 மணி தொடங்கி மதியம் 3.00 மணி வரையிலும் நடைபெற்றது.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சேப்பாக்கம் கே.எஸ்.பாண்டியன் ஜூன் 30 (2015)



கழகம் துவங்கிய காலத்திலேயே அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் வட்டச் செயலாளராக, ஆயிரம்விளக்கு பகுதி துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகப் பேச்சாளரான இவர், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**